ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ சந்தமலர்க்குழல் ॥

*This document*[*] *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சந்தமலர்க்குழல் ॥

## அசோதை கண்ணனை அம்மமுண்ண அழைத்தல்

‡சந்த மலர் குழல் தாழத்⋆ தான் உகந்தோடித் தனியே
வந்து⋆ என் முலைத்தடந் தன்னை வாங்கி⋆ நின் வாயில் மடுத்து⋆
நந்தன் பெறப் பெற்ற நம்பீ!⋆ நான் உகந்துண்ணும் அமுதே⋆
எந்தை பெருமானே! உண்ணாய்⋆ என் அம்மம் சேமம்
உண்ணாயே (1)

வங்க மறி கடல் வண்ணா!⋆ மா முகிலே ஒக்கும் நம்பீ⋆
செங்கண் நெடிய திருவே⋆ செங்கமலம் புரை வாயா⋆
கொங்கை சுரந்திட உன்னைக்⋆ கூவியும் காணாதிருந்தேன்⋆
எங்கிருந்தாயர்களோடும்⋆ என் விளையாடுகின்றாயே (2)

திருவில் பொலிந்த எழிலார்⋆ ஆயர் தம் பிள்ளைகளோடு⋆
தெருவில் திளைக்கின்ற நம்பீ⋆ செய்கின்ற தீமைகள் கண்டிட்டு⋆
உருகி என் கொங்கையின் தீம் பால்⋆ ஓட்டந்து பாய்ந்திடுகின்ற⋆
மருவிக் குடங்கால் இருந்து⋆ வாய் முலை உண்ண நீ வாராய் (3)

மக்கள் பெறு தவம் போலும்⋆ வையத்து வாழும் மடவார்⋆
மக்கள் பிறர் கண்ணுக்கொக்கும்⋆ முதல்வா மதக் களிறன்னாய்⋆
செக்கர் இளம்பிறை தன்னை வாங்கி⋆ நின் கையில் தருவன்⋆
ஒக்கலைமேல் இருந்தம்மம் உகந்து⋆ இனிதுண்ண நீ வாராய் (4)

மைத்த கருங்குஞ்சி மைந்தா!⋆ மா மருதூடு நடந்தாய்⋆
வித்தகனே விரையாதே⋆ வெண்ணெய் விழுங்கும் விகிர்தா⋆
இத்தனை போதன்றி என்தன்⋆ கொங்கை சுரந்திருக்ககில்லா⋆
உத்தமனே! அம்மம் உண்ணாய்⋆ உலகளந்தாய்! அம்மம்
உண்ணாய் (5)

பிள்ளைகள் செய்வன செய்யாய்⋆ பேசின் பெரிதும் வலியை⋆
கள்ளம் மனத்தில் உடையை⋆ காணவே தீமைகள் செய்தி⋆

www.prapatti.com

உள்ளம் உருகி என் கொங்கை⋆ ஓட்டந்து பாய்ந்திடுகின்ற⋆
பள்ளிக் குறிப்புச் செய்யாதே⋆ பால் அமுதுண்ண நீ வாராய் (6)

தன் மகனாக வன் பேய்ச்சி⋆ தான் முலை உண்ணக் கொடுக்க⋆
வன் மகனாய் அவள் ஆவி வாங்கி⋆ முலையுண்ட நம்பி⋆
நன்மகள் ஆய்மகளோடு⋆ நானில மங்கை மணாளா⋆
என்மகனே! அம்மம் உண்ணாய்⋆ என் அம்மம் சேமம் உண்ணாயே (7)

உந்தம் அடிகள் முனிவர்⋆ உன்னை நான் என் கையில் கோலால்⋆
நொந்திட மோதவுங்கில்லேன்⋆ நுங்கள் தம் ஆநிரை எல்லாம்⋆
வந்து புகுதரும் போது⋆ வானிடைத் தெய்வங்கள் காண⋆
அந்தியம் போதங்கு நில்லேல்⋆ ஆழியம் கையனே! வாராய் (8)

பெற்றத் தலைவன் எம் கோமான்⋆ பேரருளாளன் மதலாய்⋆
சுற்றக் குழாத்திளங்கோவே!⋆ தோன்றிய தொல் புகழாளா⋆
கற்றினந் தோறும் மறித்துக்⋆ கானம் திரிந்த களிறே⋆
எற்றுக்கென் அம்மம் உண்ணாதே⋆ எம்பெருமான் இருந்தாயே (9)

‡இம்மை இடர் கெட வேண்டி⋆ ஏந்தெழில் தோள் கலிகன்றி⋆
செம்மைப் பனுவல் நூல் கொண்டு⋆ செங்கண் நெடியவன் தன்னை⋆
அம்மம் உண்ணென்றுரைக்கின்ற⋆ பாடல் இவை ஐந்தும் ஐந்தும்⋆
மெய்ம்மை மனத்து வைத்தேத்த⋆ விண்ணவர் ஆகலுமாமே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com